செய்தி வெளியீடு எண் : 270 நாள்: 25.02.2022

# செய்தி வெளியீடு

## தூத்துக்குடி மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிவாரண உதவி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், துறையூர் கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் கொப்பம்பட்டியைச் சேர்ந்த திரு. குருசாமி ஈராச்சி அவர்களின் மகன் திரு. ராமர் மற்றும் திரு. பொய்யாமொழி அவர்களின் மகன் திரு. தங்கவேல்; தொட்டம்பட்டி, பசுவந்தனையைச் சேர்ந்த திரு. குட்டையன் அவர்களின் மகன் திரு. ஜெயராஜ்; நாலாட்டின்புதூரைச் சேர்ந்த திரு. வெள்ளச்சாமி அவர்களின் மகன் திரு. மாடமுத்து என்கிற கண்ணன் ஆகிய நான்கு நபர்கள் உயிரிழந்த துயரச் செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் மூன்று இலட்சம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

- - - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**